இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 320 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 15 – வெள்ளிக்கிழமை 30 ஜூன் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 320 : Thiruvalluvar Year - 2054 - Aani 15 - Friday 30 June 2023 - Trichy★★ 12 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் முதலீடுகள் அதிகரித்து வருகிறது!

# கழக ஆட்சியில் சுனாமி வேகத்தில் திட்டங்கள் செயலாக்கம்!

## முத்திரைத் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூன் 30 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (28.6.2023) தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வரும் முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்கள் தொடர்பான முதற் கட்ட ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் "தமிழ்நாட்டில் முதலீடுகள் அதிகரித்து வருகிறது" என்றும் "கழக ஆட்சியில் சுனாமி வேகத்தில் திட்டங்கள் செயலாக்கப்படுகிறது" என்றும் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வரும் முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்கள் (Iconic Projects) தொடர்பான முதற் கட்ட ஆய்வுக் கூட்டம் கடந்த 16.6.2023 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் 11 துறைகள் தொடர்பான முத்தான திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (28.6.2023) தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10வது தளத்திலுள்ள கூட்ட அரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முத்தான திட்டங்கள் தொடர்பான இரண்டாவது ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இன்றைய ஆய்வுக் கூட்டத்தில், உயர் கல்வி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, நீர்வளம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, பொது மற்றும் மறுவாழ்வு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் தகவல் ஆகிய 13 துறைகளைச் சார்ந்த நடைமுறையில் உள்ள 55 திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும், 35 எதிர்கால திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (28.6.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முத்திரை திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், துறைச் செயலாளர்கள் தங்களது துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்து விளக்கினர்.

ஆய்வுக் கூட்டத்தின் இறுதியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றியதாவது:-

நமது அரசு செயல்படுத்தி வரும் முத்திரைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட துறைக்குப் பொறுப்பு வகிக்கின்ற அமைச்சர்களோடும், செயலாளர்களோடும், துறைத் தலைவர்களோடும் நான் ஆய்வினை மேற்கொண்டு வருகிறேன். அந்த வகையில், கடந்த 16.6.2023 அன்று 11 துறைகள் தொடர்பான திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்றைக்கு 13 துறைகள் தொடர்பான திட்டங்கள் குறித்து ஆய்வினை நடத்தி முடித்திருக்கிறோம்.

**தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு திட்டங்கள் வடிவமைக்கப்படுகிறது!**

தமிழ்நாட்டின் எதிர்கால கட்டமைப்பு, வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ, அவற்றை நமது அரசு கண்ணும், கருத்துமாக செயல்படுத்தி வருகிறது. மாநில பொருளாதாரத்தின் ரத்த நாளங்களாக செயல்படுவதில் மூலதன முதலீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அனைத்துத் துறையின் வளர்ச்சியினையும் கருத்தில் கொண்டு, அந்தந்த துறைகளின் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கப்பட்டது. மனிதவள மேம்பாடு, மக்கள் நல்வாழ்வு, சமூக நீதி, வறுமை ஒழிப்பு, தொழில்வளர்ச்சி என பல்வேறு காரணிகளை மையமாக கொண்டு தமிழ்நாட்டின் வளர்ச்சி இப்போது வடிவமைக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக வளமான மாநிலமாக உருவாக்கவேண்டும்!

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் சில திட்டங்கள், இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக உள்ளது. இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டுதான், இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாடு இன்ஜினாக உள்ளது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மனம் திறந்து பாராட்டியதை நான் இந்த நேரத்தில் நினைவுகூர விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டில் குவிந்துவரும் தொழில் முதலீடுகள்!**

தமிழ்நாடு அரசு, தொழிற்சாலைகளுக்காக உள்கட்டமைப்பில் அதிக கவனம் செலுத்தி வருவதால், மேலும் தொழில் நிறுவனங்கள் இங்கு தொழில் தொடங்க ஆர்வம் காட்டி வருவதாகவும், தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் தொழில் முதலீடுகள் குவிந்த வண்ணம் உள்ளதாகவும் ஊடகங்களும், பத்திரிகைகளும் பாராட்டுகின்றன – தலையங்கம் தீட்டுகின்றன. பாராட்டுக்கள் ஆனாலும், விமர்சனங்கள் ஆனாலும், அவற்றை மனதிலே நிறுத்தி, இலக்கை நோக்கி நாம் அனைவரும் வெற்றி நடை போட வேண்டும்.

கடந்த முறை ஆய்வின்போது, உங்களது துறைகளுக்கான முத்திரைத் திட்டங்களில் தெரிவிக்கப்பட்ட பணி முன்னேற்றத்தினை தற்போது ஒப்பிடும் போது, குறிப்பிடத்தக்க அளவிற்கு பெரும்பான்மையான திட்டங்களில் முன்னேற்றம் காணப்பட்டாலும், ஒரு சில திட்டங்களில் இன்னும் தொய்வு நிலை இருப்பதை நம்மால் உணர முடிகிறது.

தொழிற்சாலைகளுக்கு உகந்த சூழ்நிலைகளான நிலம் கையகப்படுத்துதல், போக்குவரத்து வசதி, ஏற்றுமதிக்கான வசதிகள், உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல சவால்களை நாம் எதிர்கொண்டு வருகிறோம். அத்தகைய சவால்களை சந்திப்பதில் நமது அரசு தீவிர கவனம் செலுத்தி, பிரச்சினைகளுக்கு இடம் தராமல்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## பீகாரில் பாலம் இடிந்து விபத்து!

பாட்னா, ஜூன் 30 -

பீகாரில் ஒரு மாதத்திற்குள் அடுத்தடுத்து 3 பாலங்கள் இடிந்து விழுந்தது மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

வைஷாலி, பீகாரில், ககாரியா மாவட்டத்தின் அகுவானி காட் மற்றும் பாகல்பூர் மாவட்டத்தின் சுல்தான்கஞ்ச் ஆகிய பகுதிகளை இணைக்கக் கூடிய வகையில், கட்டுமானப் பணியில் இருந்த பாலம் ஒன்று, கடந்த 4ந்தேதி திடீரென இடிந்து விழுந்தது. ரூ.1,750 கோடி செலவில், 4 வழி சாலை உடன் அந்த பாலம் கட்டப்பட்டு வந்தது.

இந்நிலையில், சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்குள் மற்றொரு பாலம் இடிந்து விழுந்து பரபரப்பு ஏற்படுத்தியது. பீகாரில் தலைநகர் பாட்னாவில் இருந்து 400 கி.மீ. தொலைவில் உள்ள, கிஷன்கஞ்ச் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் மெச்சி ஆற்றின் மீது கட்டப்பட்டு வரும் பாலத்தில் உள்ள தூண் ஒன்று திடீரென கடந்த 24தேதி இடிந்து விழுந்து உள்ளது.

## பதற்றம் தொடர்ந்து நீடிப்பு!

# மணிப்பூரில் ராகுல் காந்தி மக்களுடன் சந்திப்பு!

டெல்லி, ஜூன் 30 -

வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூருக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி செல்கிறார் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் அறிவித்துள்ளார்.

மணிப்பூர் மாநிலத்தில் மைதேயி சமூக மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து குக்கி இன மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, பின்னர் அது இரு சமூகத்தினர் இடையே மோதலாக உருவெடுத்து 50 நாட்களை கடந்துவிட்டது. சுமார் 120 பேர் இந்த கலவரத்தில் உயிரிழந்துள்ளனர். 3,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மைதேய் மற்றும் குகி சமூகங்களுக்கு இடையே நடந்த வன்முறையில் ஏராளமானோரின் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. மணிப்பூரைச் சேர்ந்த சுமார் 50 ஆயிரம் பேர் மிசோரம், நாகாலாந்து மாநிலங்களுக்கு அகதிகளாகச் சென்று விட்ட நிலையில், பலர் காடுகளில் அடைக்கலம் புகுந்துள்ளனர். பலர் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மணிப்பூரில் இன்னும் கலவரம் ஓய்ந்தபாடில்லை.

மணிப்பூரில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடியும், பா.ஜ.க. அரசும் மௌனம் சாதிப்பதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக சாடி வருகின்றன. பைரேன் சிங் செயல்படாத முதல்வராக இருப்பதாக காங்கிரஸ் கட்சி விமர்சித்து, அவரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியுள்ளது. இந்நிலையில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நேற்று மணிப்பூர் சென்றார். இன்று (30.6.2023) அவர் தனது பயணத்தின் போது இம்பால் மற்றும் சுராசந்த்பூரில் உள்ள நிவாரண முகாம்களுக்குச் சென்று மக்களுடன் உரையாடுவார் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் அறிவித்துள்ளார்.

மணிப்பூர் சுமார் இரண்டு மாதங்களாக எரிந்து கொண்டிருக்கிறது, இந்த சமூக மோதலில் இருந்து அமைதிக்குச் செல்ல ஒரு குணப்படுத்தும் தொடுதல் தேவைப்படுகிறது. இது ஒரு மனிதாபிமான சோகம், வெறுப்பு அல்ல, அன்பின் சக்தியாக இருப்பது நமது பொறுப்பு" என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மணிப்பூரில் உள்ள நிலைமை குறித்து விரிவான விவாதம் நடைபெற்றது. அப்போது பல எதிர்க்கட்சிகள் மணிப்பூருக்கு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவை அனுப்ப வேண்டும் என வலியுறுத்தின. ஆனாலும் பா.ஜ.க. அரசு இதுகுறித்து உறுதியளிக்கவில்லை. இந்நிலையில் தான் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி மணிப்பூருக்கு 2 நாட்கள் பயணம் மேற்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழை எளியோரின் பசி தீர்த்துக் கொண்டாடும்

# தியாகத்தின் திருநாள் பக்ரீத்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூன் 30 -**

**பக்ரீத் பெருநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**

அதில் ஏழை எளியோரின் பசி தீர்த்துக் கொண்டாடும் தியாகத்தின் திருநாள் பக்ரீத் திருநாள் என்றும் இசுலாமிய சமூகத்தினர் அனைவரும் பக்ரீத் திருநாளைக் கொண்டாடி அன்பைப் பரிமாறிக் கொள்ளவும் அடிகளார் காட்டிய வழியில் அனைவரிடத்தில் அன்பு செலுத்தி கருணையைக் காட்டிடும் இசுலாமியப் பெருமக்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பக்ரீத் பெருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்தி அன்புநெறி காட்டிய நபிகள் நாயகத்தின் வழி நடக்கும் இசுலாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது பக்ரீத் பெருநாள் வாழ்த்துகள்.**

**ஏழை எளியோரின் பசிதீர்த்துக் கொண்டாடும் தியாகத்தின் திருநாள் இது. இந்நாளில், "ஈட்டிய பொருளில் முதலில் ஏழைகள்; பிறகு நண்பர்கள்; அடுத்துதான் தங்களுக்கு" என்ற உயரிய கோட்பாட்டின் அடிப்படையில் அனைவருக்கும் பகிர்ந்தளித்து, பயன்படுத்திக் கொள்ளும் பண்பையும், மனித நேயத்தையும் இசுலாமியப் பெருமக்கள் வெளிப்படுத்துகிறார்கள்.**

**இத்தகைய உயரிய நெறியினைக் கடைப்பிடித்து வரும் இசுலாமிய சமூகத்தினர் அனைவரும் பக்ரீத் திருநாளைக் கொண்டாடி அன்பைப் பரிமாறிக் கொள்ளவும், நபிகளார் காட்டிய வழியில் அனைவரிடத்தில் அன்பு செலுத்திக் கருணை காட்டிடவும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.